செ.வெ.எண் : 626 நாள்:

**மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் பணிக்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது - மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

தஞ்சாவூர் மாவட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் பணிக்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :

தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் வட்டாரங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களின் கடன் தேவை மற்றும் வசூல் மேலாண்மை பணிகளை வங்கிகளுடன் மேற்கொள்ள ‘ சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் ” பணிக்கு எழுத்துத்தேர்வு அடிப்படையில் தகுதியான நபர்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட உள்ளனர்.

தஞ்சாவூர் வட்டாரத்தில் 6 பணியிடங்களுக்கும், பட்டுக்கோட்டை வட்டாரத்தில் 2 பணியிடங்களுக்கும், ஒரத்தநாடு வட்டாரத்தில் 7 பணியிடங்களுக்கும், திருவிடைமருதூர் வட்டாரத்தில் 4 பணியிடங்களுக்கும், கும்பகோணம் வட்டாரத்தில் 3 பணியிடங்களுக்கும், பாபநாசம் வட்டாரத்தில் 5 பணியிடங்களுக்கும், திருவையாறு வட்டாரத்தில் 6 பணியிடங்களுக்கும், திருவோணம் வட்டாரத்தில் 2 பணியிடங்களுக்கும், திருப்பனந்தாள் வட்டாரத்தில் 6 பணியிடங்களுக்கும், அம்மாபேட்டை வட்டாரத்தில் 7 பணியிடங்களுக்கும், பூதலூர் வட்டாரத்தில் 4 பணியிடங்களுக்கும், மதுக்கூர் வட்டாரத்தில் 3 பணியிடங்களுக்கும், சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் 5 பணியிடங்களுக்கும் ஆக மொத்தம் தஞ்சாவூர் மாவட்டத்தில 60 சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் பணியிடம் தற்காலிக அடிப்படையில் நிரப்பப்படவுள்ளது.

இப்பணிக்கு விண்ணப்பிக்க ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பை சார்ந்த குழு உறுப்பினராக இருத்தல் வேண்டும். தேர்வு செய்யப்பட வேண்டிய உறுப்பினர் அதே களப்பகுதிக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். மக்கள் நிலை ஆய்வால் (PIP) கண்டறியப்பட்ட உறுப்பினராக இருத்தல் வேண்டும். 35 வயதிற்குட்பட்டவராகவும், குறைந்த பட்ச கல்விதகுதி +2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். நன்றாக எழுதப் படிக்க மற்றும் கணக்கிடும் திறன் உடையவர்களாகவம், நல்ல தகவல் தொடர்பு திறன் உடையவர்களாகவும், கைப்பேசி உள்ளவராகவும், குறுஞ்செய்தி அனுப்பத் தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். கணினி திறன் உடையவர்களாக இருத்தல் வேண்டும். அருகாமையில்

உள்ள வங்கிகளுக்கு செல்ல தயாராக இருத்தல் வேண்டும். பேச்சு திறமை பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு மதிப்பூதியமாக மாதம் ரூ.2000/- சம்மந்தப்பட்ட ஊராட்சி அளவிலான குழுக்கூட்டமைப்பின் மூலம் வழங்கப்படும். மேற்குறிப்பிட்டவாறு தொடர்புடைய களப்பகுதியை சேர்ந்த தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் உரிய விண்ணப்பங்களை தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை திட்ட இயக்குநர், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, அறை எண்.223, 2-வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் - 613 010 என்ற முகவரிக்கு 14.08.2018-க்குள் அனுப்புமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு :

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தஞ்சாவூர்.